# பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்கள் உரிமை சட்டம்-2001 மற்றும் உழவர்களின் பயிர் இரகங்களை பதிவு செய்தல்

## முன்னுரை


பயிர் இரகங்களை பாதுகாத்தல் விவசாயிகள் மற்றும் பயிர் இனப்பெருக்க விஞ்ஞானிகளின் உரிமைகள் மற்றும் புதிய வகை பயிர் இரகங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக பயனுள்ள அமைப்பை நிறுவுதல் விவசாயத்தின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. புதிய வகை பயிர் இரகங்களின் வளர்ச்சிக்காக பயிர் மரபியல் வளங்களை பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் கிடைக்கச்செய்தல் ஆகியவற்றில் எந்த நேரத்திலும் விவசாயிகளின் பங்களிப்பை பொருத்த மட்டில் அவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதும், பாதுகாப்பதும் அவசியமானதாக கருதப்படுகிறது. மேலும் விவசாய வளர்ச்சியை துரிதப்படுத்த புதிய பயிர் இரகங்களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான முதலீட்டை தூண்டுவதற்கு பயிர் இரகங்களை உற்பத்தி செய்பவர்களின் உரிமைகளை பாதுகாப்பது அவசியம். இத்தகைய பாதுகாப்பு விதை உற்பத்தியில் வளர்ச்சியை எளிதாக்கும். இது விவசாயிகளுக்கு உயர்தர விதைகள் மற்றும் நடவு பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யும். அறிவுசார் சொத்துரிமைகளின் வர்த்தகம் தொடர்பான அம்சங்களுக்கான ஒப்பந்தத்தை இந்தியா அங்கீகரித்து ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மேற்கூரிய நோக்கங்களை மேம்படுத்த பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்கள் உரிமை சட்டம்-2001 உருவாக்கப்பட்டது. விவசாயிகள், மாணவர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் எளிதாக புரிந்துகொள்ளும் வண்ணம் வெப்பமண்டல கிழங்கு பயிர்களின் எடுத்துக்காட்டுதலைப் பயன்படுத்தி இச்சட்டத்தில் உள்ள பல்வேறு விதிகள் குறித்து சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

## பயிர் இரகங்கள் என்றால் என்ன?



இனங்கள் என்ற சொல் தாவர ராஜ்ஜியத்திற்குள் தாவரவியல் வகைப்பாட்டின் நன்கு அறியப்பட்ட அலகு ஆகும். இருப்பினும் ஒரு இனத்திற்குள் பல்வேறு வகையான தாவரங்கள் இருக்கலாம் என்பது தெளிவாகிறது. விவசாயிகள் மற்றும் பயிர் சாகுபடி செய்பவர்களுக்கு குறிப்பிட்ட குணாதிசயங்களைக் கொண்ட சாகுபடியாளர்களின் சுற்றுச்சூழல்களுக்கு ஏற்றவாறு இருத்தல் நல்லது. ஒரு பயிர் வகை மிகவும் துல்லியமாக வரையறுக்கப்பட்ட பயிர் குழுவைச் சார்ந்தது. பயிர் வகைகள் எந்த இனத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதோ அந்த இனத்தின் பங்குகளைக் கொண்டது.

## விவசாயிகளிடையே பயிர் இரகங்களின் தேவை என்ன?




வேளாண், தோட்டக்கலை மற்றும் வனவியல் துறைகளில் இயற்கையோடு இணைந்து நல்ல மகசூல் பெற, தரம் உயர்ந்த விளைச்சலைப் பெற பூச்சி மற்றும் நோய் தாக்கத்திற்கு எதிர்ப்புத் திறனுடன் அதிக மகசூல் பெற புதிய இரகங்கள் தேவைப்படுகின்றன. பயிர் இரகங்கள் முழு அளவு விளைச்சலைப் பெற இரகங்களுடன் சேர்ந்து மற்ற வேளாண் இடுபொருட்களின் பங்கும் முக்கியமானதாக உள்ளது. பல்வேறு நாடுகளில் வேளாண் உற்பத்தியில் தன்னிறைவு அடைய பயிர் இரகங்கள் முக்கிய பங்காற்றி உள்ளன. எடுத்துக்காட்டாக திருவனந்தபுரம் மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய இரகங்கள் மற்றும் அவற்றின் முக்கிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### சி.டி.சி.ஆர்.ஐ யால் வெளியிடப்பட்ட முக்கிய மரவள்ளி இரகங்கள்

#### ஸ்ரீ காவேரி



- வெளியிடப்பட்ட ஆண்டு : 2023
- ஆயுட்காலம் (மாதங்கள்) : 9-10
- மகசூல் (டன்/ஹெக்டேர்) : 40-50
- மாவுச்சத்து (%) : 27-28

**முக்கிய பண்புகள்:** மரவள்ளி மஞ்சள் தேமல் நோயிற்கு எதிர்ப்பு தன்மை கொண்டது. ஊட்டச்சத்துக்களின் பயன்பாட்டுத்திறன் அதிகம் கொண்டது. வறட்சி அதிகம் தாங்கும் திறன் கொண்டது. நீளமாக வெள்ளி சாம்பல் நிறத்தில் அதிக எண்ணிக்கையிலான தண்டுகள் கிளைத்து வரும் இரகம், வெளிர் பச்சை இலைக்காம்பு கொண்டது. உருளை வடிவத்தில் க்ரீம் நிறத்தில் கிழங்கு உள்ளது. தோல்க்ரீம் நிறத்தில் வெண்மையான கிழங்கை கொண்டுள்ளது.

#### ஸ்ரீ சக்தி



- வெளியிடப்பட்ட ஆண்டு : 2018
- ஆயுட்காலம் (மாதங்கள்) : 9-10
- மகசூல் (டன்/ஹெக்டேர்) : 40-45
- மாவுச்சத்து (%) : 27-32

**முக்கிய பண்புகள்:** தொழிற்சாலைக்கேற்ற இரகம். வறட்சியை தாங்க வல்லது. மரவள்ளி மஞ்சள் தேமல் நோயிற்கு எதிர்ப்பு தன்மை கொண்டது. கிளைகள் அதிகம் கிளைக்காத அடர் பழுப்பு நிறத்தண்டு, பழுப்பு நிற பச்சை நிற உரோமங்களோடு வெளிவரும் இலைகள் பழுப்பு நிறத்துடன் கூடிய பச்சை இலைக்காம்பு கொண்டது. நீண்ட உருளை வடிவத்தில் பழுப்பு நிறம் கொண்ட தோல் உடையது. தோல்-க்ரீம் நிறத்தில் வெண்மையான கிழங்கு கொண்டுள்ளது.

#### ஸ்ரீ சுவர்ணா



- வெளியிடப்பட்ட ஆண்டு : 2018
- ஆயுட்காலம் (மாதங்கள்) : 7-8
- மகசூல் (டன்/ஹெக்டேர்) : 35-40
- மாவுச்சத்து (%) : 25-27

**முக்கிய பண்புகள்:** மரவள்ளி மஞ்சள் தேமல் நோயிற்கு முற்றிலும் எதிர்ப்பு திறன் கொண்டது. நீண்டு வளரக்கூடிய நுனி கிளைத்து வெளிர் பழுப்பு நிற தண்டு கொண்டது. ஊதாநிற இலைக்காம்பும் வெளிர் பழுப்பு நிறத்தில் இலையும் கொண்டது. கூம்பு வடிவ மற்றும் உருளை வடிவில் பழுப்புநிறம் கொண்ட தோலுடனும் க்ரீம் கலர் தோல் மற்றும் வெள்ளை நிறம் கொண்டது.

#### ஸ்ரீ ரெக்ஷா



- வெளியிடப்பட்ட ஆண்டு : 2017
- ஆயுட்காலம் (மாதங்கள்) : 8-9
- மகசூல் (டன்/ஹெக்டேர்) : 40-45
- மாவுச்சத்து (%) : 27-31

**முக்கிய பண்புகள்:** முழுவதுமான மரவள்ளி மஞ்சள் தேமல் நோயிற்கு எதிர்ப்பு திறன் கொண்டது. அறுவடைக்கு பின் ஏற்படும் பயிர் வினையியல் சீரழிவிற்கு எதிர்ப்பு திறன் கொண்டது. குறைவான சர்க்கரை அளவு (1.1) வறட்சியை தாங்க வல்லது. இயற்கை முறையில் சாகுபடி செய்யும்போது நிலையான மகசூல் தரவல்லது. உயரமாக வளரக்கூடியது (275-325 செ.மீ) கிளை கிளைக்காத பழுப்புநிற தண்டு கொண்டது. அடர்ஊதா இலைக்காம்பு மற்றும் வெளிர் பழுப்பு நிறத்தில் இலை கொண்டது. பழுப்பு நிறத்தோல் மற்றும் உள்புற க்ரீம் தோல் மற்றும் வெள்ளை நிறம் கொண்ட கிழங்கு வகை.

## பயிர் இரகங்கள் பாதுகாப்பு என்றால் என்ன?

புதிய பயிர் இரகங்களை வளர்ப்பவர்களுக்கு அறிவுசார் சொத்துரிமையாக உரிமைகளை வழங்குதல் ஆகும். இது பயிர் செய்பவர்களின் உரிமை என்று அழைக்கப்படுகிறது. ஒருவரின் உரிமையால் பாதுகாக்கப்பட்ட பல்வேறு பயிர் வகைகளின் மனித நோக்கத்திற்காக பல்வேறு வகைகளை பரப்புவதற்காக வளர்ப்பவர்களின் அங்கீகாரம் தேவை. பயிர் உற்பத்தி முறை நீண்ட செயல்முறை கொண்டது. பல்வேறு தாவர வகைகளை எளிதாகவும், விரைவாகவும், இனப்பெருக்கம் செய்ய முடியும். முதலீட்டை மீட்டெடுக்க வளர்ப்பவர்களுக்கு பாதுகாப்பு தேவை. புதிய பயிர் வகைகளை வளர்ப்பவர்கள் மட்டுமே அந்த இரகங்களை பாதுகாக்க முடியும். யார் வேண்டுமானாலும் எந்தவகையான பயிர் இரகங்களையும் வளர்ப்பு செய்யலாம். எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. பயிர் செய்பவர்கள் ஒரு தனி நபராக, விவசாயியாக, ஆராய்ச்சியாளராக, ஒரு தனியார் நிறுவனமாக, பொது நிறுவனமாக இருக்கலாம். ஒரு பயனுள்ள பயிர் வகை பயிர் பாதுகாப்பு முறையை நாம் ஊக்குவிக்க வேண்டும். சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும், நலனுக்காகவும் புதிய வகை இரகங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்.

## தாவர வகை இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்களுக்கான உரிமைச் சட்டம்:

தாவரவகை இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்களுக்கான உரிமைச் சட்டத்தை இந்தியாவில் புதிய இரகங்களை அபிவிருத்தியில் ஈடுபடும் வல்லுநர்கள் அல்லது விஞ்ஞானிகள், உழவர்கள் மற்றும் பொதுநலன் கருதி 2001-ல் இந்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தை செயல்படுத்த பயிர் வகைகள் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்களுக்கான உரிமை ஆணையமும் ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் தாவர பயிர் இரகங்களுக்கு பாதுகாப்பு உழவர்களின் உரிமை நிலைநாட்டுதல் பாரம்பரிய இரகங்களை பேணிக்காத்தல், அழியாமல் தடுத்தல் போன்ற பணிகளையாற்றும் உழவர்களின் உரிமையை நிலைநாட்ட வழிவகை செய்யப்பட்டது இதன் தனிச்சிறப்பு ஆகும். இந்திய சட்டத்தின் படி 1978-ல் பன்னாட்டு யூனியனால் இயற்றப்பட்ட புதிய பயிர் இரகங்களுக்கு பாதுகாப்பு சட்டத்தை உள்ளடக்கியதாக மட்டுமல்லாமல் இந்திய மக்கள் உழவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் நலன்களும் இதன் மூலம் பாதுகாக்கப்படுகிறது. இச்சட்டம் வணிக ரீதியாக உருவாக்கப்படும் இரகங்களையும் மற்றும் உழவர்களே கண்டறியும் புதிய இரகங்களை அங்கீகரித்து அதிகப்படியான புதிய இரகங்களை உருவாக்க ஊக்குவிப்பதோடு வணிகம் தொடர்பான அறிவுசார் கொள்கையை செவ்வனே செயல்படுத்தி அனைத்து தரப்பு மக்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்த உதவுகிறது. இச்சட்டத்தை செவ்வனே செயல்படுத்திட மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் கூட்டுறவு துறையினால் நவம்பர் மாதம் 1-ம் தேதி 2003-ல் தாவர இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்களுக்கான உரிமை ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. அறிவிக்கப்பட்ட பயிர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை பதிவாளர் அலுவலகம் பெறுகிறது.

## தாவர வகை இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்களுக்கான உரிமைச் சட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

- உழவர்கள் மற்றும் புதிய இரகங்களை உருவாக்கும் விஞ்ஞானிகளின் உரிமையை பாதுகாக்க ஒரு சிறப்பு அமைப்பாக செயல்பட்டு இந்தியாவில் மென்மேலும் புதிய இரகங்களை உருவாக்கிட ஊக்குவிப்பது.
- உழவர்களினால் பாதுகாக்கப்பட்ட பாரம்பரிய இரகங்களை கொண்டு அதை தாவர மரபியல் வளம் சேமிப்பு கிடங்கில் சேமித்து புதிய இரகங்களை உருவாக்க துணை புரிவதை அங்கீகரித்தல்.
- நாட்டின் வேளாண் வளர்ச்சியை துரிதப்படுத்துதல், புதிய இரகங்களை உருவாக்கும் வல்லுநர்களின் உரிமையை பாதுகாத்தல், அரசுடன் தனியார் நிறுவனமும் தொடர்ந்து புதிய இரகங்களை உருவாக்க ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் அதிக முதலீடு பெறுதல்
- நம் நாட்டில் நல்ல தரமான விதைகள் மற்றும் நாற்றுகள் விவசாயிகளுக்கு கிடைக்க விதை உற்பத்தி கம்பெனிகளை ஊக்குவித்தல்.

## ஆணையனத்தின் முக்கியச் செயல்கள்:

- புதிய இரகங்கள், வழக்கத்தில் உள்ள இரகங்கள், உழவர்களின் பாரம்பரிய இரகங்கள் மற்றும் நடைமுறையில் உள்ள தாவர வகை இரகங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட இரகங்களை பதிவு செய்தல்
- புதிய இரகங்களின் தனித்தன்மை ஒரே மாதிரியான இயல்பு தன்மை மற்றும் தாக்குப்பிடிக்கும் குணம் ஆகியவைகளை ஆய்வு செய்ய வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்குதல்
- பதிவு செய்த இரகங்களின் குணாதிசியங்களை பாதுகாத்தல்
- அனைத்து வேளாண் இரகங்களுக்கும் கட்டாயமான பதிவு அட்டவணை தயார் செய்தல்
- தாவர சேகரிப்பு, பாதுகாப்பு மற்றும் பாரம்பரிய இரகங்களை தொன்றுதொட்டு சாகுபடி செய்யும் உழவர்களையும் அதனைச்சார்ந்த அமைப்புகளையும் குறிப்பாக மலைவாழ் மக்களை கண்டறிந்து அங்கீகரித்து விருது வழங்கி கௌரவித்தல்
- தேசிய வேளாண் தாவர இரகங்களை பதிவு செய்யும் பதிவேடுகளை பராமரித்தல்
- தேசிய தாவர மரபியல் வங்கிகளை பராமரித்தல்

## சட்டப்படியுள்ள உரிமைகள்

### புதிய இரகங்களை உருவாக்கும் விஞ்ஞானிகளின் உரிமைகள்

விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட இரகங்களை உற்பத்தி செய்ய, விற்பனை செய்ய, சந்தைப்படுத்த, விநியோகிக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்ய, தனிப்பட்ட உரிமை விஞ்ஞானிகளுக்கு உண்டு. விஞ்ஞானிகள் புதிய இரகங்களை விற்பனை செய்ய தனியே முகவர்கள் அல்லது லைசன்ஸ் பெற்றவர்களை நியமிக்க முடியும். இந்த உரிமை சம்மந்தமாக எழும் பிரச்சனைகளை சிவில் கோர்ட் மூலம் தீர்க்கலாம்.

### ஆராய்ச்சியாளர்கள் உரிமை:

உரிமைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்த இரகங்களை ஆய்வுக்காக ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்த எந்த தடையும் இல்லை. புதிய இரகங்களை கண்டறிய பதிவு செய்த இரகத்தை அதன் முதன்நிலை இரகத்தையும் ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தலாம். ஆகையால் ஒரே இரகத்தை ஆய்வுக்காக திரும்ப திரும்ப பயன்படுத்த இரகத்தை பதிவுசெய்த உரிமையாளரிடம் முன் அனுமதி பெற வேண்டும்.

### உழவர்களின் உரிமை:

- உழவர்கள் தன் அனுபவத்தால் புதிய இரகத்தை கண்டறிந்தால், அதன் இரகங்களை உருவாக்கும் விஞ்ஞானிகள் போல் பதிவு செய்து காப்புரிமை பெறலாம்.
- உழவர்களின் இரகங்களை தற்போது வழக்கத்திலுள்ள இரகங்களாக பதிவு செய்ய முடியும்
- உழவர்கள் எப்பொழுதும் போல் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்த இரகங்களை சேமிக்க, பயன்படுத்த, சாகுபடி செய்ய, மறுபடியும் விதைக்க, பரிமாற்றம் செய்ய, பகிர்ந்துகொள்ள, சாகுபடி செய்ய உற்பத்தி பொருட்கள் விதைகள் உள்பட விற்பனை செய்யலாம். ஆனால் தொழில் ரீதியான அடையாளம், சின்னமிட்ட அட்டையும் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்த இரகங்களை உழவர்கள் விற்பனை செய்ய முடியாது.
- உழவர்கள் யாரேனும் தாவர மரபணுக்கள் வளத்தை பேணிக்காத்தலோ, மற்றும் வனப்பகுதியில் இருக்கும் பொருளாதாரத்தை பெறுக்கக்கூடிய தாவர வகைகளை பாதுகாப்பவர்களுக்கு விருதுபெற தகுதியானவர்கள்.
- சட்டத்தின் கீழ் பதிவு செய்த இரகங்கள் சாகுபடி செய்யும் போது எதிர்பார்த்த பலன் பெறவில்லையென்றால் உழவர்கள் இழப்பீடு பெற இச்சட்டத்தின் 39(2) கீழ் வழிவகை உள்ளது.
- ஆணையத்தினால் எடுக்கப்படும் முடிவுக்கு உழவர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால் ஆணையத் தீர்ப்பாயம் அல்லது உயர்நீதி மன்றங்களில் வழக்கு தொடர எந்தவித பணமும் கட்ட வேண்டியதில்லை.

### உழவர்களின் இரகங்கள் என்பது என்ன?

- விவசாய இரகங்களின் பாதுகாப்பு மற்றும் உழவர்களின் உரிமைகள் 2001

சட்டத்தின் படி உழவர்களின் இரகங்கள் என்பது,

- இரகங்கள் விவசாயிகளால் உருவாக்கப்பட்டு மற்றும் பாரம்பரியமாக அவர்களது நிலத்தில் பயிரிடப்பட்டு வருவது
- பண்படாத அல்லது நாட்டு இரகங்கள் அல்லது இரகங்களை பற்றிய விவசாயிகளின் பொது அறிவு மேலும் உழவர்களின் இரகங்கள் தனி மனித விவசாயியை விட ஒட்டுமொத்த விவசாய சமூகத்தினரால் உருவாக்கப்பட்டு மற்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

விவசாயிகளால் பாதுகாக்கப்பட்டு வரும் பாரம்பரிய இரகங்களையும் இச்சட்டத்தின் மூலம் பதிவு செய்யலாம். மேலும் இச்சட்டமானது விஞ்ஞானிகளால் தோற்றுவிக்கப்பட்ட இரகங்களுக்கு விஞ்ஞானிகளுக்கு அதன் உரிமையை வழங்குவது போல் உழவர் சமூகத்தினரால் உருவாக்கப்பட்டு பாரம்பரிய இரகங்களுக்கு அதன் உரிமையை வழங்க வழிவகை செய்கிறது.

## விவசாயிகள்/பாரம்பரிய கிழங்கு இரகங்கள்



**மரவள்ளி கிழங்கின் தரம் உயர்த்தப்பட்ட முக்கிய இரகங்களின் குணாதிசயங்கள், பண்ணைய கால இரகங்களிலிருந்து பெறப்பட்டதற்கு சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

மரவள்ளி: 20 வகையான மரவள்ளி இரகங்கள் வெளியிடப் பட்டுள்ளது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய பண்டையகால இரகங்கள்.

| இரகங்கள் | இனப்பெருக்கமுறைகள் | தாய்ச்செடிகள் | முக்கிய குணாதிசயங்கள் |
|---|---|---|---|
| ஹெச் -97 | மரபணு மாற்றம் செய்தல் | மஞ்சவெள்ள x ஏசிசிஎண்.300 | காலம்: 10 மாதங்கள் சராசரி மகசூல்: 25-35 டன்/ஹெக்டேர் மாவுச்சத்து: 27-31% சமையல் தரம்: நல்லது |
| ஹெச் -165 | மரபணு மாற்றம் செய்தல் | சடையமங்கலம் வெள்ள x கலிகாலன் | காலம் : 8 மாதங்கள் சராசரி மகசூல்: 33-38 டன்/ஹெக்டேர் மாவுச்சத்து: 23-25% சயனோஜென் 150-165 மிகி/கி சமையல் தரம்: நல்லது |
| ஹெச் -226 | மரபணு மாற்றம் செய்தல் | எம் 4 x ஏத்தக்கருப்பன் | காலம்: 10 மாதங்கள் சராசரி மகசூல்: 30-35 டன்/ஹெக்டேர் மாவுச்சத்து: 28-30%, சயனோஜென் : 180-200 மி.கி/கி சமையல் தரம்: நல்லது |

சர்க்கரை வள்ளி கிழங்கு: 21 இரகங்கள் மற்றும் வீரிய இரகங்கள் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. சத்துமிகுந்த மற்றும் வண்டு தாக்குதலுக்கு எதிர்ப்புத்திறன் கொண்ட நாட்டு இரகத்தையும் அதிக மகசூல் மற்றும் உயிரியியல் மற்றும் உயிரற்ற காரணிகளால் ஏற்படும் பயிர் வினையியல் மாற்றங்களுக்கு சகிப்புத்தன்மை கொண்ட புதிய இரகங்களுடன் ஒட்டு செய்யப்பட்டது.

| இரகங்கள் | இனப்பெருக்க முறைகள் | தாய்ச்செடிகள் | முக்கிய குணாதிசயங்கள் |
|---|---|---|---|
| ஹெச் -42 | ஒட்டுக்கட்டும் வீரிய முறை மற்றும் இரகங்கள் தேர்வு செய்தல் | வெள்ளா டேம்ப் xட்ரையம்பு | காலம் : 120 நாட்கள் சராசரி மகசூல்: 22-25 டன்/ஹெக்டேர் |
| ஹெச் -41 | | நேரின் x பண்டைய கால இரகங்கள் | காலம் : 120 நாட்கள் சராசரி மகசூல்: 22-25 டன்/ஹெக்டேர் |
| பூ சோனா | இரகங்கள் தேர்வு செய்தல் | பண்டைய கால இரகங்கள | காலம் : 105-110 நாட்கள் சராசரி மகசூல்: 20-24 டன்/ஹெக்டேர் பீட்டா கரோட்டீன்: 12-14 மி.கி./100 கி. |
| பூ கிருஷ்ணா | | பழைய இரகத்திலிருந்து உற்பத்தி செய்தல் | காலம் : 105-110 நாட்கள் சராசரி மகசூல் : 20-24 டன்/ஹெக்டேர் ஆந்தோசையனின் அளவு : 90 மி.கி./100 கி. |

பெரு வெற்றிவள்ளி கிழங்கு: 10 வகையான இரகங்கள் பழைய இரகத்திலிந்து குளோன் முறை மூலம் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

| இரகங்கள் | இனப்பெருக்க முறைகள் | தாய்ச்செடிகள் | முக்கிய குணாதிசயங்கள் |
|---|---|---|---|
| ஸ்ரீநீலிமா | இரகங்கள் தேர்வு செய்தல் | பழைய இரகத்திலிந்து உற்பத்தி செய்தல் குளோன் முறை மூலம் | காலம்: 9 மாதங்கள் சராசரி மகசூல் : 33 டன்/ஹெக்டேர் ஊதா நிறம் |

**பண்டையக் கால சேம்பு மற்றும் சர்க்கரைவள்ளி கிழங்கு இலையில் உள்ள ஊட்டசத்துக்களின் விபரம்**

| பயிரின் பெயர் | புரதம் (கி) | தாதுஉப்புக்கள்(கி) | நார்ச்சத்து(கி) | கால்சியம் (மி.கி) | பாஸ்பரஸ் (மி.கி) | இரும்புசத்து (மி.கி) |
|---|---|---|---|---|---|---|
| அமராந்தஸ் பானிக்குலேட்டர்ஸ் | 5.9 | 3.8 | 2.1 | 530 | 60 | 18.4 |
| டெம்பு இலைகள (கருப்பு) | 6.8 | 2.5 | 1.8 | 460 | 125 | 0.98 |
| டெம்பு இலைகள (பச்சை) | 3.9 | 2.2 | 2.9 | 227 | 82 | 10.0 |
| சர்க்கைரவள்ளிகிழங்கு (கோல்மோ) | 2.9 | 2.1 | 1.2 | 110 | 46 | 3.9 |



**பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்கள் உரிமை சட்டத்தின் கீழ் உழவர்களின் பயிர் இரகங்களை பதிவு செய்தல்:**

தனிப்பட்ட விவசாயிகள், விவசாய சமூகம், விவசாய குழுக்கள் இச்சட்டத்தின் கீழ் உழவர் இரகங்களை பதிவு செய்ய விண்ணப்பிக்கலாம். விவசாயிகள் அல்லது விவசாய சமூகம் அல்லது விவசாயிகள் குழுவால் விவசாயிகள் இரகங்களுக்கான விண்ணப்பம், தாவர வகைகள் மற்றும் விவசாயிகளின் உரிமைச்சட்டம் 2001-ல் உள்ளது. சம்மந்தப்பட்ட மேலாண்மைக் குழு அல்லது மாவட்ட வேளாண் அலுவலர் அல்லது சம்மந்தப்பட்ட மாநில வேளாண் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி வல்லுநர் அல்லது மாவட்ட பழங்குடியின மக்கள் மேம்பாட்டு அதிகாரி ஆகியோர்களால் இணைப்பு 1ல் உள்ள ஒப்புதலுடன் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். பல்வேறு பாதுகாப்பிற்காக பரிந்துரைக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்திசெய்ய சம்மந்தப்பட்ட ஊராட்சி தலைவர் / செயலாளர் / பல்லுயிர் மேலாண்மை குழு அல்லது சம்மந்தப்பட்ட மாவட்ட வேளாண் அலுவலர் அல்லது ஆராய்ச்சி இயக்குநர் / சம்மந்தப்பட்ட மாநில வேளாண் பல்கலைக்கழகங்களின் விரிவாக்க இயக்குநர் அல்லது சம்மந்தப்பட்ட மாவட்ட பழங்குடியினர், மேம்பட்ட அலுவலகம் மண்டல திட்ட இயக்குநர் இச்சட்டத்திற்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க ஒப்புதல் மற்றும் பரிந்துரை செய்துக்கொள்ளலாம். இந்த விண்ணப்பமானது இணைய தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.இணையதள முகவரி: https://plantauthority.gov.in /sites/default/ files/farmervariety2013.pdf

**மேலும் தகவல்களுக்கு**


பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்கள் உரிமை சட்டம்
வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்
என்ஏஎஸ்சி காம்ப்ளக்ஸ், டிபிஎஸ் மார்க் தோடாப்பூர் கிராமம் எதிரில் புதுடெல்லி-110 012
அலைபேசி எண்: 01125848127 / 25841696 இணையதளம்: ppvfra@nic.in


தொழில்நுட்ப கோப்புறை

அக்டோபர் 2023

பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்கள் உரிமை சட்டம் -2001
மற்றும் உழவர்களின் பயிர் இரகங்களை பதிவு செய்தல்


ஆசிரியர்கள்
பி. முருகேசன் & து. ஜெகநாதன்
ICAR- CTCRI

க. வேல்முருகன் & சு. சத்யா
ICAR- KVK நாமக்கல்



வெளியீடு
ஜி. பைஜு
இயக்குநர்
ICAR- CTCRI



भाकृअनुप -केन्द्रीय कन्द फसल अनुसंधान संस्थान
(भारतीय कृषि अनुसंधान परिषद्)
श्रीकार्यम, तिरूवनन्तपुरम 695 017, केरल, भारत

ஐ.சி.ஏ.ஆர் - மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம்
ஸ்ரீகாரியம், திருவனந்தபுரம் - 695 017, கேரளா
அலைபேசி எண்: 0471 - 2598551 முதல் 2598554 வரை தொலைநகல் : 0471-2590063
மின்னஞ்சல் : director.ctcri@icar.gov.in இணையதளம்: https://www.ctcri.org